## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண்.424/2016 மற்றும் 421/2016 நாள். 14.09.2023**

2023 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14 ம் நாள் மனுதாரர் தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தசாமி | தொழில் | |
| த. பெ./க.பெ. | ஆறுமுகம் | சாதி | |
| கிராமம் | காட்டுசித்தாமூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 52 |

**ம..சா.2**

**குறுக்கு விசாரணை**

I. நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை நான் படித்து பார்க்கவில்லை. என் மகன் விபத்தில் இறந்துவிட்டதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 23.04.2016 ம் தேதி விபத்து நடந்தது. என் மகன் உடன் மொத்தம் 3 பேர் ஒரே இருசக்கர வாகனத்தில் வந்த போது விபத்து நடந்தது. விபத்தை நான் நேரில் பார்த்தேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் நான் விபத்தை நான் நேரில் பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக நான் தான் புகார் கொடுத்துள்ளேன். மணிகண்டன் என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனக்கு 3 மகன்கள். மற்ற இரண்டு மகன்கள் கூலி வேலை செய்கிறார்கள். இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பினார்கள். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனத்தின் மோட்டார் வாகனஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை.

II. அடையாளம் தெரியாத வாகனம் விபத்தை ஏற்படுத்திவிட்டது என்றாலும், நான் சொல்லும் வாகனம் விபத்தை ஏற்படுத்தவில்லை என்றாலும், அதனால் தான் விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை

விசாரித்தார்கள். என் மகன் 10 வது வரை படித்து பெங்களூரில் வெல்டிங் வேலை செய்து வந்தார். என் மகன் வெல்டர் வேலை செய்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் மகனுடன் சேர்த்து 3 நபர்களாக மது அருந்திவிட்டு இருசக்கர வாகனத்தில் வந்து அவர்களாகவே விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் தடுப்புகள் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். தடுப்பு வைத்திருந்ததால் அந்த இடத்தில் வாகனங்கள் மெதுவாக செல்லும் என்றாலும், சம்பவ இடத்தில் கரும்பு லாரி வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்தது என்று சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டயீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. என் மகன் மாதம் ரூ. 30 ஆயிரம் சம்பாதித்தார் என்பதற்கான ஆவணங்கள் எதுவூம் தாக்கல் செய்யவில்லை.

III. லாரியின் ஓட்டுநரால் விபத்து ஏற்பட்டதாக சொல்லுவது தவறு என்றாலும், அதனால் லாரியின் உரிமையாளரும், ஓட்டுநரும் எனக்கு நஷ்டயீடு வழங்கவேண்டியதில்லை என்றாலும், மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.